**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *198*** **நாள் : *15.11.2024***

ஒன்றிய அரசின் *SBM (U) 2.0* தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்றவற்றில் இருந்து வெளியேற்றப்படும் அனைத்து வீட்டு உபயோகத் தண்ணீர் மற்றும் கழிவுநீர் சேகரிக்கப் பெற்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கசடு சுத்திகரிப்பு நிலையம் *(STP/FSTP)* மூலமாக முறையே மறுசுழற்சி செய்து மீண்டும் மாற்றுப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்த நடைமுறையை முழுமையாக பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலமாக பின்பற்றுவதனால் தண்ணீர் **+** நகரம் *(Water* **+** *)* என்ற நிலையை அடைவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட *15* நாட்களுக்குள்ளாக *solidwastecorp7@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது கருத்துக்களை தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**